# முன்னுரை

# முன்னுரை

கட்டுக்கோப்பான கதை ஓட்டத்தையும், அதன் ஊடே நிகழும் கருத்தோட்டத்தையும், இலக்கியச் சுவைஞன் மட்டும் அல்லாமல் அனைத்து நிலை மாந்தர்களும் விரும்பி ஏற்றுச் சுவைப்பதால் புதின இலக்கியம் செம்மையான வளர்ச்சியைப் பெற்று வருகிறது. இக்கால இலக்கிய வகைப்பாட்டுள் புதினம் தலையாய பங்கு வகிக்கிறது.

ஆண், பெண் இருபாலருமே இலக்கியப் படைப்பாளர்களாக உள்ளனர். குறிப்பாக மனையாள்-இல்லாள்-குடும்பத்தலைவி என்றழைக்கப்படும் பெண்கள் சமுதாயத்தின் சரிபாதியினர். குழந்தை வளர்ப்பு, சமையல் பணி, குடும்பத்து மூத்த உறவினர்களைப் பேணுதல் போன்ற பணிகளை மிகுதியும் பெண்களே மேற்கொள்வதால், ஆண்களைக் காட்டிலும், பெண்களே குடும்பத்தோடு நெருங்கிய தொடர்பு கொண்டவர்கள் எனக் கூறலாம். ஆகவே மகளிர் படைப்புக்களில் குடும்ப உறவுகளையும் சிக்கல்களையும் ஆய்வு செய்வது பொருளுடையதாகிறது.

தொண்ணூறுகளில் வெளிவந்த புதினங்களில் மகளிர் படைப்புக்களில் குடும்ப உறவுகளும் சிக்கல்களும் என்று வரையறைப்படுத்தி இவ்வாய்வு அமைந்துள்ளது. பெண் படைப்பாளர்களில் குறிப்பிடத்தக்கவர்களான இந்துமதி, சிவசங்கரி, ராஜம்கிருஷ்ணன், வாஸந்தி, சிவகாமி, சுப்ரா, பாமா ஆகியோரின் குறிப்பிடத்தகுந்த பதினைந்துப் புதினங்கள் இங்கே ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பெறுகின்றன.

மனித சமுதாயத்தின் தொடக்கக் காலத்தில், குடும்பம் என்ற அமைப்போ திருமணம் என்ற நிகழ்வோ இடம் பெறவில்லை. மக்கள் விலங்குகளைப் போலவே முறையற்ற பாலுறவைக் கொண்டிருந்தனர். மூன்று நான்கு அல்லது அதற்கும் மேற்பட்ட ஆண்கள் ஒரு குழுவாகச் சேர்ந்து ஏறக்குறைய அதே அளவுடைய பெண்கள் குழுவோடு கட்டுபாடற்ற உடலுறவு கொண்டனர். அவர்களிடையே உறவு நிலையற்ற போக்கிலேயே இருந்தது. இந்நிலையில் குடும்பம் என்னும் அமைப்பு ஓர் உலகளாவிய கூறாக அமையவில்லை.

ஆரம்பக் காலத் தமிழ்ப்புதினங்கள் கூட்டுக்குடும்பத்தைச் சித்திரித்துள்ளன. வாழ்விடங்களும், தொழில் பண்பாட்டு முறைகளும் அதற்கு ஒத்துழைத்துள்ளன. அதன் பின்னர் நிகழ்ந்த சமூகம், பொருளாதாரம், கல்வி, தொழில் மாற்றங்கள், குடும்பங்கள் சிதைவதற்குக் காரணங்களாயின. இக்காலக் குடும்பச் சிதைவுக்கான நிகழ்வுகளில் பெருமளவு இளைய தலைமுறையினரும், ஓரளவு மூத்த தலைமுறையினரும் காரணமாகின்றனர். இவ்வாறான கால யதார்த்தம் பெண் படைப்பாளர்களின் படைப்புக்களிலும் பதிவாகியுள்ளன என்பது இவ்வாய்வின் அடிப்படையான கருதுகோள் ஆகும்.

மனித வாழ்க்கை காலந்தோறும் மாற்றத்திற்கு உள்ளாகிறது. வாழ்க்கையைச் சார்ந்த பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும் காலந்தோறும் மாறுகின்றன. காலமாற்றங்களுக்கேற்ப, தனது வடிவ உள்ளடக்கங்களை மாற்றிக்கொள்ளும் இலக்கியங்கள், சமூக மாற்றங்களை யதார்த்தமாகவும், உணர்வுப்பூர்வமாகவும் பதிவு செய்கின்றன. இலக்கியங்களுக்குள் புதினம் என்னும் இலக்கிய வடிவம் விரிவான இடம், நீண்ட காலம், அதிகப்படியான கதை மாந்தர்கள் என விரிந்த தளங்களை உள்ளடக்கியது. எனவே புதினங்கள் உணர்வுகளைக் கூர்மையாகப் பதிவு செய்யும் வாய்ப்புகளைப் பெற்றுள்ளன.

## ஆய்வுத் தலைப்பு

தொண்ணூறுகளில் மகளிர் புதினங்களில் குடும்ப உறவுகளும் சிக்கல்களும் என்பது ஆய்வுத்தலைப்பு ஆகும்.

## ஆய்வு நோக்கம்

தமிழ்நாட்டில் புதின வரிசையில் மகளிர் படைப்பாளர்கள் பலர் சமுதாயத்திற்கேற்ற வகையில் புதினங்கள் பலவற்றைப் படைத்துள்ளனர். அவர்களில் வாஸந்தி, சிவசங்கரி, ராஜம் கிருஷ்ணன் ஆகியோர் குடும்பங்களில் இடம் பெற்றுள்ள உறவுகளையும் சிக்கல்களையும் மையமாகக் கொண்டு புதினங்களைப் படைத்துள்ளனர். தெளிவான சிந்தனையும், குறிக்கோளுடனும் செயல்படும்

நோக்கினை மையமாகக் கொண்டு குடும்பத்தில் எழும் சிக்கல்களை எங்ஙனம் களைவது என்றும், உறவு கட்டுக்குள் இருக்க மூத்தத் தலைமுறையினரின் அறிவுரையும் ஆலோசனையும் பெற்று நடத்தல் போன்ற கருத்துக்களைப் புதினங்களில் படைத்துள்ளனர். குடும்பத்தில் எழும் சிக்கல்களால் குடும்பச்சிதைவு என்பது இன்றைய தலைமுறையில் தவிர்க்க இயலாததாகி உள்ளது. இதற்கான அடிப்படைக் காரணம் பற்றி ஆய்வு செய்வதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

## ஆய்வு எல்லைகளும் மூலங்களும்

ஆய்வு நோக்கத்திற்குப் பொருந்தி வரக்கூடிய 1991ஆம் ஆண்டு முதல் 2000ஆம் ஆண்டு முடிய இந்துமதி, சிவசங்கரி, ராஜம்கிருஷ்ணன், வாஸந்தி, சிவகாமி, சுப்ரா, பாமா, ஆகிய ஏழு மகளிர் படைப்பாளர்கள் எழுதிய கீழ்க்காணும் பதினைந்து புதினங்கள் மட்டும் ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப் பெறுகின்றன.

### இந்துமதியின் புதினங்கள்.

| | | |
|---|---|---|
| ஓடும் மேகங்களே | - | 1992 |
| தொட்டுவிடும் தூரம் | - | 1994 |

### சிவசங்கரியின் புதினங்கள்.

| | | |
|---|---|---|
| நான் நானாக | - | 1992 |
| இவர்களும் அவர்களும் | - | 1992 |
| வேரில்லாத மரங்கள் | - | 1993 |
| அம்மா பிள்ளை | - | 1993 |
| இனி | - | 1994 |

### ராஜம்கிருஷ்ணனின் புதினங்கள்.

| | | |
|---|---|---|
| பாதையில் பதிந்த அடிகள் | - | 1991 |
| மாறி மாறிப் பின்னும் | - | 1996 |

வாஸந்தியின் புதினங்கள்.

காதலெனும் வானவில் - 1992

வேர்களைத் தேடி - 1993

கடைசி வரை - 1996

சிவகாமியின் புதினம்.

ஆனந்தாயி - 1992

சுப்ரா புதினம்.

சில பாதைகள் சில பயணங்கள் - 1996

பாமாவின் புதினம்.

தழும்புகள் காயங்களாகி - 1992

## கருதுகோள்

ஆரம்பக்கால தமிழ்ப் புதினங்கள் கூட்டுக்குடும்பத்தைச் சித்திரித்துள்ளன. அப்போதையச் சுற்றுப்புறச் சூழல்கள் அக்கூட்டுக்குடும்பத்திற்கு ஒத்துழைத்தன. வளர்ந்து வரும் காலச்சூழ்நிலைக்கேற்ப, கல்வி, சமூக நிலை, பொருளாதாரம், தொழில் பணியின் தன்மைக்கேற்ப கூட்டுக்குடும்பங்கள் பிரிந்து தனிக்குடும்பங்களாக உருவாகத் தொடங்கின. கூட்டுக்குடும்பங்கள் சிதறாமல் மூத்தத் தலைமுறையினரால் அதிகளவில் அரண் செய்யப்பட்டன. குடும்பச்சிதைவிற்கு இளையதலைமுறையினரால் அதிகளவிலும் மூத்தத் தலைமுறையினர் சிறிதளவிலும் காரணமாயிருந்தனர் என்பது மகளிர் புதின ஆசிரியர்களின் படைப்புகளில் பதிவாகியிருக்கும் என்பது இந்த ஆய்வின் அடிப்படையான கருதுகோளாகும்.

## ஆய்வின் இன்றியமையாமை

குடும்ப உறவினை மேம்படுத்தவும், சிக்கல்களை நீக்கவும் தேவையான வழிகாட்டுதல்களைக் கண்டறியும் நோக்கில் இவ்வாய்வு அமைகின்றது. கடந்த கால நிகழ்வுகளை, நிகழ்காலத்தில் பிரதிபலித்து எதிர்காலத்துக்கு மக்களை அழைத்துச் செல்லும் சாதனங்களாகத் திகழ்பவை புதினங்கள்.

சமுதாயத்தில் குடும்ப உறவு பெறும் இடம், பெண்களின் நிலை, அவர்களது பணி, அவர்களுக்கு ஏற்படும் இன்னல்கள் ஆகியவை குறித்து மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் இவ்வாய்வு அமைகின்றது.

## ஆய்வுத்தரவுகள்

இவ்வாய்விற்குத் தேவையான தரவுகள் பல்வேறு வகையாகச் சேகரிக்கப்பட்டன. அவற்றுள் சில தரவுகள் முதன்மைத் தரவுகளாகவும், வேறு சில துணைமைத் தரவுகளாகவும் அமைந்துள்ளன.

முதன்மைத்தரவுகள் தொண்ணூறுகளில் வெளிவந்த இந்துமதி, சிவசங்கரி, ராஜம்கிருஷ்ணன், வாஸந்தி, சிவகாமி, சுப்ரா, பாமா, ஆகியோரின் புதினங்கள் ஆகும்.

புதினங்கள் குறித்து வெளிவந்துள்ள அனைத்து வகையான ஆய்வுகள், திறனாய்வு நூல்கள், கட்டுரைகள், துணைமை ஆதாரங்களாகக் கொள்ளப்பட்டன.

## தரவுகள் சேகரித்தல்

ஆய்வுக்குட்பட்ட அனைத்து புதினங்களும் ஆய்வு நோக்கத்திற்கு ஏற்ற வகையில் பகுப்பாய்வு செய்யப்பட்டன. பின்னர் பகுக்கப்பட்ட தரவுகள் கருதுகோள்களின் அடிப்படையில் வகைப்படுத்தப்பட்டன. படைப்பாளி தமது புதினங்களில் வெளிப்படுத்திய கருத்துக்களின் அடிப்படையில் தரவுகள் தனித்தனியே சேகரிக்கப்பட்டுள்ளன. வகைப்படுத்தப்பட்ட தரவுகள் துணைத்தரவுகளின் துணையோடு தொகுக்கப்பட்டு, கருதுகோள்களின் மீது ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

## ஆய்வு அணுகுமுறை

புதினங்களை ஆய்வுப்பொருளாகக் கொண்டு ஆராயும் இவ்வாய்வில் புதினங்களில் இடம்பெறும் குடும்ப அமைப்பு, குடும்ப உறவுகள், குடும்பத்தில் எழும் சிக்கல்கள், அரண் செய்யும் உறவுகள் மற்றும் முரண் செய்யும் உறவுகள் ஆகியன பற்றி ஆய்வு நோக்கில் விளக்கப்படுகின்றன.

## ஆய்வு அமைப்பு

இவ்வாய்வேடு முன்னுரை, முடிவுரை நீங்கலாகக் கீழ்க்காணும் ஐந்து இயல்களாகப் பகுக்கப்பட்டுள்ளது.

1. குடும்பம்
2. குடும்ப உறவுகள்
3. குடும்பச் சிக்கல்கள்
4. குடும்பத்திற்கு அரண் செய்யும் உறவுகள்
5. குடும்பத்திற்கு முரண் செய்யும் உறவுகள்

## இயல்-ஒன்று குடும்பம்

குடும்பம் சமூக அமைப்பின் சிறு அலகு. சமூக அமைப்பை நிறுவனங்களின் தொகுதியாக அல்லது இணைவாகப் பேசும் சமூகவியலுக்குக் குடும்பமே ஆதாராமானதும் அடிப்படையானதும் ஆகும். மனித இனத்தின் தொடக்கக் காலத்தில் முறையற்ற பாலுறவே நிகழ்த்திய குடும்பம் என்னும் அமைப்பு அதன் படிமலர்ச்சிக் காலத்தில் இரத்த உறவுக் குடும்பம், குழுமணக் குடும்பம், நிலையற்ற பிணைப்புடைய மணக் குடும்பம், தந்தைத் தலைமைக் குடும்பம், ஒரு துணை மணக்குடும்பம் என ஐந்து நிலைகளைக் கொண்டதாக உள்ளது.

சூழலுக்கேற்றவாறு குடும்பங்கள் பல மாற்றங்களைப் பெற்றுள்ளன. அக்குடும்பங்கள், தாத்தா-பாட்டி, தாய்-தந்தை, அத்தை-மாமா, சிற்றப்பா-சின்னம்மா, பெரியப்பா-பெரியம்மா அனைவரையும் கொண்ட கூட்டுக் குடும்பங்களாகவும், அதன் பின்னா் அக்கூட்டுக்குடும்பங்களில் ஏற்பட்ட சிக்கல்களினால் கூட்டுக்குடும்பங்கள் தாய்-தந்தை, மகன்-மகள் என்ற அளவில் தனிக்குடும்பங்களாகப் பிரிந்தும் வளரத்தொடங்கின.

பல்வேறு சிக்கல்களினால் கூட்டுக்குடும்பங்கள், தனிக்குடும்பங்களாக மாறியதை மகளிர் புதினங்கள் கருவாகக் கொண்டுள்ளன. மகளிர் புதினங்களில் இடம் பெற்றுள்ள குடும்ப நிகழ்வுகள், குடும்பத்தின் தோற்றம், வளர்ச்சி, வகைகள்,

பணிகள், குடும்ப அமைப்பு, திருமணத்திற்கு முந்தைய நிலை, மணநிலை, குழந்தை வளர்ப்பு நிலை, கூட்டுக்குடும்பங்கள், தனிக்குடும்பங்களாகச் சிதைந்து போவதற்கான காரணங்கள் ஆகியன பற்றி இவ்வியல் விரிவாக ஆராய்கின்றது.

## இயல்-இரண்டு குடும்ப உறவுகள்

சமூகத்தின் ஓர் அலகான குடும்பத்தை மையமாக வைத்து மகளிர் புதினங்கள் பல எழுந்தன. சிவசங்கரியின் பெரும்பாலான புதினங்களுக்குத் தளமாக அமைவது குடும்பம் எனும் நிறுவனம்தான்.

"அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது " (குறள் எண்.45)

என்ற வள்ளுவர் வகுத்த வாழ்க்கை நெறியினை இன்றைய இளைய தலைமுறையினர் நன்றாக அறிந்து கொண்டு பின்பற்றினால் திருமணத்தின் வழி வரும் குடும்ப உறவு நீடித்து நிலைத்திருக்கும்.

மகளிரின் புதினங்களில் இடம்பெறும் குடும்பங்கள், குடும்பத்தில் உள்ள உறவுகள் (தந்தை-மகள் உறவு, தாய்-மகள் உறவு, காதலன்-காதலி உறவு, கணவன்-மனைவி உறவு, மாமியார்-மருமகள் உறவு, சகோதரன்-சகோதரி உறவு) ஆகியன ஆய்வுநோக்கில் விளக்கப்படுகின்றன.

## இயல்-மூன்று குடும்பச் சிக்கல்கள்

மகளிர் புதினங்கள் தொடக்கக் காலத்தில் பெண் அடிமைத்தனத்தையே விளக்கிக் காட்டியது. நாடு விடுதலையடைந்தும், பெண் விடுதலை கிடைக்கவில்லை என்பதையே மகளிர் தமது படைப்புகளில் சுட்டியிருந்தனர். புதினங்களின் கருப்பொருள் நாட்டு விடுதலைக்குப் பின் குடும்பம் சார்ந்தவையாக மாறின. அக்குடும்பக் கதைகளில் மகளிர் சிக்கல்கள் மிகுதியாகச் சித்திரிக்கப்பட்டன. அதற்குக் காரணம் பெண்கள் வேலைக்குச் செல்வது, ஆணாதிக்கம்,

குழந்தையின்மையால் சிக்கல், குழந்தை வளர்ப்பில் சிக்கல், பொருளாதாரச் சிக்கல், தாழ்வு மனப்பான்மை, வரதட்சிணைக் கொடுமை, மாமியார்-மருமகள் உறவு நிலை எனப்பல நிலைகளில் சிக்கல்கள் சுட்டப்படுகின்றன.

இச்சிக்கல்கள் கூட்டுக்குடும்பத்தில் பல விளைவுகளை ஏற்படுத்தி கூட்டுக் குடும்பத்தைச் சிதைத்தும் தனிக்குடும்பமாக மாற்றி விடுகிறது என்பதை இவ்வியல் சுட்டுகிறது.

## இயல்-நான்கு குடும்பத்திற்கு அரண் செய்யும் உறவுகள்

இரத்த சம்பந்தப்பட்ட குடும்ப உறுப்பினர்கள் கூடி வாழ்வதே கூட்டுக்குடும்பம் ஆகும். குடும்பத்தில் உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் தத்தம் பணியினைச் செய்தால்தான் சமுதாயத்தில் குடும்பங்கள் மகிழ்வோடு வாழ முடியும். இக்கூற்றுக்கு அரண் செய்வது போல் குடும்ப உறுப்பினர்களில் சிலர் செயல்படுகின்றனர். குடும்ப உறவினராக இல்லாமல், நல்ல உள்ளம், சமூக சேவை மனப்பான்மை கொண்ட பெரியவர்கள் சிலர் குடும்பத்திலுள்ள இளையவர்களுக்கு ஆலோசனை வழங்கி ஆதரவு கொடுத்து வழி நடத்துவதைப் புதினங்கள் வாயிலாக அறியலாம். கல்வி, திருமணம் ஆகியவற்றிலும், உறவினர்களின் குழந்தைகளுக்கு உதவுதல் போன்ற செயல்களில் அரண் செய்யும் உறவுகளை இவ்வியல் ஆராய்கின்றது.

## இயல்-ஐந்து குடும்பத்திற்கு முரண் செய்யும் உறவுகள்

உலகில் முரண்பாடுகள் என்பது இயல்பானவை. தோற்றத்திலும், பண்பிலும் பல்வேறுபட்ட மனிதர்களை வாழ்க்கையில் நாம் காண்கிறோம். பல்வேறு ஏற்றத்தாழ்வுகளைக் கொண்ட மனித உறவுகளை ஒருங்கிணைத்து குடும்பமானது இயங்கி வருகிறது. குழந்தை மணம், கலப்பு மணம், வரதட்சிணை, ஆணாதிக்கம், கணவனின் தீயநடத்தை, பெண்ணடிமை, தாழ்வு மனப்பான்மை, வறுமை, பொருளாதாரம் போன்றவற்றின் அடிப்படையில் தோன்றும் சிக்கல்களால் குடும்பத்தின் உறுப்பினர்களான தாய், தந்தை, கணவன், மனைவி, நாத்தனார், மைத்துனர்,

மாமா, அத்தை ஆகியோர் குடும்பத்திற்குச் சிலநேரங்களில் முரண் செய்யும் உறவுகளாகச் சித்திரிக்கப்படுவதை இவ்வியல் ஆராய்கின்றது.

முடிவுரை

மனித வாழ்க்கைக்குக் குடும்பம் என்ற நிறுவனமே அடித்தளமாகும். இந்நிறுவன உறுப்புகளான உறவுகளிடையே நடைமுறை வாழ்வில் சிக்கல்கள் தோன்றுவது இயற்கையே. சிக்கல்கள் இருப்பதால், தீர்வைத் தேடுவது தொடக்கம் பெறும். எனவே குடும்ப உறவு தொடர்பான ஆய்வு முற்றுப்பெறுவதில்லை. ஒவ்வொரு இயலின் வாயிலாகக் கண்டறியப்பட்டுள்ள கருத்துக்களின் தொகுப்பாகவும், அவற்றின் மீதான முடிவுரைப்பதாகவும் இவ்வியல் அமைகிறது. எதிர்காலத்தில் இவ்வாய்வினை அடியொற்றி மேற்கொள்ளத்தக்க ஆய்வுக்களங்கள் சுட்டிக்காட்டப் பெற்றுள்ளன.

ஆய்விற்குப் பயன்படுத்தப்பட்ட முதன்மை ஆதாரங்களும், துணைமை ஆதாரங்களும் அகரவரிசையில் தொகுக்கப்பட்டு துணைநூற் பட்டியலாக அளிக்கப்பட்டுள்ளன. ஆய்விற்குப் பயன்பட்ட புதின ஆசிரியர்களின் பிற புதினங்கள் பின்னிணைப்பில் தொகுத்தளிக்கப்படுகின்றன.